# மில்க்வைற் செய்தி
# Milk White News


தபாற்பெட்டி இல. 77 யாழ்ப்பாணம். தொலைபேசி: 7233

கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ★ சித்திரை 1981 ★ இதழ் - 64


## இராஜகோபுரம்

"தெல்லிநகரில் தெளிதேனும் பாலுமெனச்
சொல்ல அருள்புரியுந் துர்க்கைக்கு —
நல்லதொரு"

எனத்தொடங்கும் பாவொன்று பாடிய பண்டித மணியவர்கள் வாக்கின் வண்ணம் இராஜ கோபுரம் அமைந்துள்ளது. தமிழ்நாட்டிற் புகழ்பெற்ற கோபுரவமைப்பாளர் குலத்தில் வந்த ஸ்ரீ தேவலிங்க ஸ்தபதியாரும் அவர் மைந்தரும், குழுவினரும் அரிதின் முயன்




சுவாமி சின்மயானந்த அவர்களின் சீடர் வியக்த பிரம்மசாரி அவர்கள் மில்க்வைற் தொழிலதிபரின் வெளியீடுகளைக் கையேற்று ஆசிவழங்கல்.



றமைத்த அதியற்புத சிற்ப நுணுக்கம் அமைந்த செங்கற் கோபுரம் இது.

சுற்றுப்புறங்களில் நெருக்கமாக வாழ்பவர்களே யன்றிக் காங்கேயன் வீதியால் தினமும் போக்கு வரத்துப் புரியும் பல்லாயிரம் மக்களும் தூரத்தே கண்டு தொழுதுள்ளவுயர்வடையத் துணையாயுள்ள தெய்விகக் கோபுரம் இது. இது இதனுள் அடங்கி யிருக்கும் பல்லாயிரக்கணக்கான செங்கட்டிகளின் எண்ணிக்கையிலும் பார்க்கப் பல்லாண்டு காலம்

(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)

★ குற்றங்களை நினைத்திருப்பவனுக்குச் சாந்தியில்லை ★

உ
சிவமயம்



# கடவுள் வணக்கம்

## திருநாவுக்கரசு நாயனுர் தேவாரம்

திருப்பாலைத்துறை - திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

விண்ணி ணுர்பணிந் தேத்த வியப்புறும்
மண்ணி ணுர்மற வாதுசி வாயவென்
றெண்ணி ணுர்க்கிட மாஎழில் வானகம்
பண்ணி ணுரவர் பாலைத் துறையரே.

திருச்சிற்றம்பலம்

திருப்பாலைத்துறை என்னும் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமான், தேவர்கள் பணிந்து துதிக்க, மண்ணுலக மக்கள் வியப்புற்று மறவாது சூக்கும பஞ்சாட்சரமாய சிவாயநம என்னும் சிவமூலமந்திரத்தைத் தியானித்தவர்களுக்கு வீடுபேறு அமைத்தருளியுள்ளார்.

## திருப்பாலைத்துறையுறையும் பெருமான்

நீலமாமணி போன்ற கண்டத்தர், நீள் சடையர், அழகிய மதியினைச் சடையிடை வைத்தருளியவர், கங்கையையும் சடையில் வைத்தவர்; சூலம், மான், மழு ஏந்தியவர், பிரகாசம் பொருந்திய முடியில் பால் நெய் அபிடேகம் செய்யப்பெறுபவர். யானைத்தோல் போர்த்தவர், உமை பங்கினர், பவளம் போன்ற மேனியர், பக்தியின் பாலராய பெண்கள் தொழ வேத கீதங்கள் கேட்பவர், பேய்கள் பூதங்கள் சூழச் சுடுகாட்டில் ஆடல்புரிபவர்; சித்தர், தேவர், தானவர், பித்தர், வேதியர் தொழுதுதிற்ப வரமருளுபவர். பலவித வாத்தியங்கள் ஒலிப்பக் கேட்டருள்புரிபவர்.

## கிழக்கு மாகாணத்துக்கு ஜே!

முதலாம் அரசாங்க சபையில் மட்டக்களப்பு - திருக்கோணமலைத் தொகுதியின் பிரதிநிதியாய் இருந்த எம். எம். சுப்பிரமணியம் அவர்கள் சபையின் சபாநாயகருக்கு அடுத்த உப சபாநாயகருக்கு அடுத்த காரிய நிர்வாக சபைகளின் தலைவராய்த் தெரியப்பெற்ருர். இவருக்கு 28 அங்கத்தவர்களும் இவரை எதிர்த்த விக்கிரமநாயக அவர்களுக்கு 23 அங்கத்தவர்களும் வாக்களித்தனர்.




## உழவு

முயற்சியில் சிறந்த உழவுத்தொழில்

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்.

உழவுத் தொழிலினுல் உணவுபெற்று உண்டுவாழ்கின்றவர்களே சிறப்பான வாழ்வு வளம் உள்ளவராவர்; ஏனையோர் பிறரை வணங்கி உணவுகொண்டு அவர் பின்னே செல்பவராவர்.

### Farming

They alone live who live by tilling the soil, the rest have to fawn on them for food and are their slaves.

## ஏப்ரல் மாத நிகழ்ச்சிகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | புதன் | — | ஏகாதசி விரதம் |
| | | | நீர்வேலி கந்தர் கொடி |
| 2. | வியாழன் | — | பிரதோஷ விரதம் |
| 4. | சனி | — | அமாவாசை விரதம் |
| | | | வண்ணை - காமாட்சி கொடி |
| 7. | செவ்வாய் | — | கார்த்திகை விரதம் |
| 13. | திங்கள் | — | துர்மதி வருடப்பிறப்பு |
| | | | மருதடி தேர் |
| 15. | புதன் | — | ஏகாதசி விரதம் |
| 16. | வியாழன் | — | பிரதோஷ விரதம் |
| 17. | வெள்ளி | — | பெரிய வெள்ளி |
| | | | தெல்லிப்பழை துர்க்கை அம்மன் |
| | | | மகா கும்பாபிஷேகம் |
| 18. | சனி | — | சித்திரா பூரணை |
| | | | வண்ணை - காமாட்சி தேர் |
| 29. | புதன் | — | திருநாவுக்கரசுநாயனுர் குருபூசை |
| 30. | வியாழன் | — | ஏகாதசி விரதம் |

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

### இராஜகோபுரம்......

நின்று நிலவித் தரிசனம் செய்வோர்க்குப் பாவ விமோசனமளித்துக் கோடி புண்ணிய மீவதாக என்று எல்லாம் வல்ல துர்க்காதேவி திருவருளைப் பண்டிதர் சிவப்பிரகாசம் அவர்கள் பாடலைப்பாடி வேண்டுவோமாக.

"நின்று மனத்தூறும் நேயமுடன்வரும் நின்னடியார்
என்று மருளார்வர் தேவியே! நீதா னெமக்கருள்
இன்றுதரல்வேண்டும் எங்கள் பகவதி! என்னலோடும்
நன்று திருவருள் நல்குவள் வாழ்க! நனியுலகே!

★ தியாகம் ஒன்றே இறைவனுக்கு உகந்தது ★

## உங்களுக்குத் தெரியுமா?

— விடைகள் வேறிடத்தில் —

1. காப்புறுதித் திட்டம் முதலில் ஆரம்பித்த இடம்
2. எகிப்தில் உள்ள புதிய அதிசயம்.
3. யூதர், கிறிஸ்தவர், இஸ்லாமியர் மதிக்கும் நகரம்.
4. கனடாவின் வடபாகத்தை முதலில் ஆய்ந்தவர்.
5. மலேசியாவின் தலைப்பட்டணம்.
6. சாத்வீகமுறையில் நீக்ரோக்களின் உரிமைகோரியவர்
7. பாப்பாண்டவரின் பிரத்தியேக தேவாலயம்.
8. பிரித்தானிய பாராளுமன்றக் கூட்ட எண்.
9. மகாவம்சம் எழுதப்படக் காரணமானவன்.
10. வெண்ணிற இரத்தமுள்ள பிராணி.
11. பாம்பின் மிகக்கூடிய நீளம்.
12. சொல்லுக்கும் பொருளுக்கும் சம்பந்தம் கூறுவது.
13. மாலைக்கால நட்சத்திரம் எனப்படுவது.
14. புனுகு மானினம் உள்ள நாடு.
15. கோரோசனை மாடு உள்ள நாடு.

## தென்மராட்சியில் பனை விழா

தென்மராட்சி மாதர் மன்றத்தார் சாவகச்சேரி றிபேர்க் கல்லூரி மண்டபத்தில் பன்முகமாக நடத்திய கருத்தரங்கம் பொருட்காட்சி முதலிய நிகழ்ச்சிகளில் காலை வேளை நிகழ்ச்சியின் போது மில்க்வைற் தொழிலதிபர் பனையபிவிருத்திபற்றிப் பேசி, பனம் பண்டங்களைச் சந்தைப் படுத்தும் வகையினையும் விரிவாக விளக்கினர்.

இது நடந்து இரண்டாம் நாள் மாலை மட்டுவில் தெற்கில் மாதர் மன்றத்தில் சேமிப்பு, பன்னவேலை, பொருளாதார சுபீட்சம் என்பனபற்றிப்பேசிக் கிராமாபிவிருத்தி பற்றி விளக்கி, வெளியீடுகளை வழங்கினர்.

## உஷ்ணவலைய விவசாயி 1881

உஷ்ணவலைய விவசாயி என்றொரு நூலினை ஏ. எம். பேர்குசனும், ஜே. பேர்குசனும் இணைந்து வெளியிட்டு விவசாயிகளுக்கு வேண்டிய தகவல்களைக் கொடுத்து நூறாண்டுகளாய்விட்டன.

## பெண்கள் வாக்குரிமை

டொனமூர் அரசியல் திருத்தக்குழுவினர் இலங்கைப் பெண்களுள் முப்பது வயதுக்கு மேற்பட்டவருக்கே வாக்குரிமையை முதலில் வழங்கினர்கள். ஆனல் குடியேற்ற நாட்டு மந்திரியார் பாஸ்வீல்ட் பிரபு தாராள மனத்தராய் வயது எல்லையை ஆண்களுக்கமைந்த முறையில் 21 ஆகக் குறைத்துவிட்டார்.

## வேடிக்கைப் பழமொழிகள்

கூத்தாடி கிழக்கே பார்ப்பான்.
கூலிக்காரன் மேற்கே பார்ப்பான்.
கூழுக்கு மாங்காய் கொண்டாட்டம்.
குரங்குக்குத் தேங்காய் கொண்டாட்டம்.
கெட்டகுடி கெட்டாலும்,
வட்டி நட்டம் இல்லாமல் வாங்கிவிடு
கெட்டுப்போன பார்ப்பானுக்குச் செத்தமாடு தானம்.
கையில்லாமல் கரணம்போட முடியாது.
காலில்லாமல் ஓட முடியாது.
கையை வெட்டி விட்டாலும் அகப்பையைக் கட்டிக் கொண்டு களவெடுப்பான்.

## முஸ்லிம்கள் மத்தியில்

உலகத் தமிழாராய்ச்சி மாநாடு சென்றிருந்த மில்க்வைற் தம்பதிகளுக்குத் தமிழக முஸ்லிம்கள் மத்தியில் தனிப்பட்ட வரவேற்பும் பரிசுகள் பரிமாற்றமும் நடைபெற்றன. தமது பாரியாருக்கும் தமக்கும் கிடைத்த இஸ்லாமிய நூல்களையும் இன்னும் சில நூல்களையும் இவர்கள் பலாலி ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி முஸ்லிம் மாணவர் சங்கத்துக்கும், யாழ்ப்பாணம் கதீஜா மகா வித்தியாசாலை மாணவிகளுக்கும் பகிர்ந்தளித்து மகிழ்ந்தார்கள். பலாலியில் இவரைப் பணிசெய்ய வழி செய்தவர் அங்கு விளையாட்டுத்துறை கராட்டி விரிவுரையாளர் ஆவர்.

## ஐம்பதாண்டுகளாய் விட்டன

ஐம்பதாண்டுகளுக்கு முன் 1931ஆம் ஆண்டில் சேர் கிறேம்தொம்சன் இலங்கைத் தேசாதிபதியாக வந்தார். டொனமூர் திருத்தத்தின் வண்ணம் முதலாம் அரசாங்க சபைத் தேர்தல் நடைபெற்றது. சர்வசன வாக்குரிமைப் பலத்தால் திருமதி அதெலின் மொலமுரே ருவான்வெலி தொகுதியில் தெரியப்பெற்ற முதற் பெண் பிரதிநிதியானர். அவரின் கணவரான ஏ. எவ். மொலமுரே இலங்கை அரசாங்க சபையின் முதல் சபாநாயகராகத் தெரியப்பெற்ருர். தோட்டப்பகுதிகளிலிருந்து தெரியப் பெற்று வந்த பெரியண்ணன் சுந்தரம் அவர்கள் அரசாங்க சபையில் மந்திரிகளில் ஒருவரானர்.

## உணவில் உலோக உப்புகள்

எமது நாளாந்த உணவில் உலோக உப்புகளான கல்சியம், பாஸ்வரம், அயம் முதலியன இன்றியமையாதன. இவை அற்றுப்போனல் இரத்தம் நல்லிரத்தமாயிருக்கமாட்டாது. கல்சியம் பயறு. அகத்தி, முருங்கை, கீரை தானியங்கள் எனபனவற்றில் உண்டு. பாஸ்வரம் பயறு, தானியம். எள், கடலை என்பனவற்றில் உண்டு. அயம் என்னும் இரும்பு கீரை, அகத்தி முருங்கை என்பனவற்றில் உண்டு. (மில்க்வைற் தொழிலதிபர் ஆயிரக்கணக்கான அகத்திக் கன்றுகளையும், பல்லாயிரம் பாக்கெட் கீரை விதைகளையும் இலவசமாக எங்கும் வழங்கியதைப் பொது மக்கள் பாராட்டுகிருர்கள்.)

★ ஆசை ஆளை ஒழிக்கிறது, ஆர்வம் உயர்த்துகிறது ★




மகாத்மா காந்தியடிகள் கைது செய்யப்பட்டு 18-3-1922 இல் பரபரப்பான விளக்கம் நடைபெற்றது. நீதியரசர் சி. என். புறூம்பீல்ட் தலைமையில் விசாரணை நடைபெற்றது. மாட்சிமை தங்கிய மன்னர் பிரானின் ஆட்சியில் திருப்தியீனம் கண்டு கலகம் விளைவித்ததாக சாட்டப்பட்ட குற்றத்தைக் காந்தியடிகள் அமைதியாக ஏற்றுக்கொண்டார். நீதியரசர் அவரை ஆறுண்டுக் காலம் சிறையில் வாழுமாறு தண்டனை விதித்ததோடு, அவரைப் போல உயர்ந்த லட்சியமும் உன்னத வாழ்வும் துறவு மனப்பான்மையும் உள்ளவரைத் தாம் காணவில்லை என்று புகழ்ந்து போற்றினார். காந்தியடிகளோ தாம் சிறையில் பறவைபோல மகிழ்வதாகவும், தாம் படிக்கவும் எழுதவும் தமக்கு ஆறுதல் கிடைத்தமைபற்றி மகிழ்ந்தார். சத்திய சோதனை என்னும் தலைசிறந்த நூலை அவர் சிறைச்சாலையில் தமது தவப்பொழுதில் எழுதினார்.

சிறையில் வாழ்ந்தபோது அவருக்கு அப்பெண்டிசிற்ரிஸ் ஒப்பறேசன் நடைபெற்றது. மின்சாரக்கோளாறு காரணமாக அரிக்கன்லாம்பு வெளிச்சத்தில் சத்திரசிகிச்சை நடைபெற்றது. அவர் இரண்டு ஆண்டுகளில் விடுதலை பெற்றுப் பம்பாய் சென்றார்.

## கொடிகாமம் பலநோக்கு கூட்டுறவு

கொடிகாமம் பலநோக்குக் கூட்டுறவுச் சமாஜ முறைகளைக் கண்டு உற்சாகம் கொடுத்த மில்க்வைற் தொழிலதிபர் அங்கே நிலவும் மாதர் சங்கத்தாரின் பன்முகப் பணிகளைப் பாராட்டினார். பனையை நம்பி வாழலாம் என வழிகாட்டியதோடு பன்னவேலைக்கான ஓலை வாரும் இயந்திரம் முதலியவற்றையும் வழங்கி, மாதர்களுள் எவரேனும் தமிழ்நாடு சென்று பனையபிவிருத்தி பயில்வதானால் உதவி செய்வதாகவும் உற்சாகமூட்டினார். சேமிப்பு முறையிலமைந்த சீட்டிழுப்பில் தலைமைதாங்கிப் பரிசுக்குரிய சீட்டுகளையும் தம் கையாலே இழுத்துப் பணி செய்தார்.

## வேடர்களின் குடித்தொகை குறைந்துவருவது ஏன்?

இலங்கை வாழ் வேடர்களின் தொகை வரவரக் குறைந்து வருகிறது. அவர்கள் சந்ததிப்பெருக்கத்தில் குறைவில்லாதவர். ஆயின் அவர்களின் குடித்தொகை குறைந்து குறைந்து வருவது ஏனெனில் அவர்கள் தங்களை வேடர் என வெளிப்படுத்துவதில் வெட்கப்பட்டுத் தம்மைச் சிங்களவர் எனப் பதிவுசெய்து வருவதேயாம். அவர்கள் கல்விகற்று வானொலி முதலிய நவீன கருவிகளையும் கையாளுகின்றார்கள்.

## அடுக்கு மொழிகள் சில

மாசு மறு
மாட்சியும் மதிப்பும்
மாட கூடங்கள்
மாட மாளிகை
மாடு கன்று
மாண்டு மடிந்து
மாண்டு மறைந்து
மாதா பிதாக்கள்
மாயம் மந்திரம்
மாலை மரியாதை
மானம் ஈனம்
மானம் மதிப்பு
மானம் மரியாதை
மானம் ரோஷம்
மானம் வெட்கம்

## கொழும்பு வடக்கில் தமிழ்ச் செல்வாக்கு

முதலாம் அரசாங்க சபைத் தேர்தலில் கொழும்பு வடக்குத் தொகுதியில் போட்டியிட்ட வைத்திய கலாநிதி இரத்தினசோதி சரவணமுத்து வெற்றியீட்டிக் கல்விக் காரிய நிர்வாக சபையை அலங்கரித்தார். அதேகாலத்தில் மன்னார் முல்லைத்தீவுத் தொகுதியில் ஜி. ஜி பொன்னம்பலம் அவர்களை வெற்றிகொண்டு பிரதிநிதியான எஸ். எம். ஆனந்தன் அவர்களும் கல்விக்குழுவிலேயே இருந்தார். கலாநிதி சரவணமுத்து அவர்களுக்குப்பின் அவர் மனைவி நேசம் சரவணமுத்து கொழும்பு வடக்குத்தொகுதிப் பிரதிநிதியாயிருந்தார்.

## கிறிக்கற் ஆட்டத்திற்கு நூறுண்டு

கிறிக்கற் எங்கும் கிறிக்கற். பகல்முழுதும் கிறிக்கற். பாடசாலைகள் தோறும் கிறிக்கற். கிறிக்கற் விளையாட்டுக்கு முற்காலத்தில் பெயர்போன ஆங்கிலேயர் அதனை 1881-ம் ஆண்டில் எங்கள் பிரதேசத்தில் பழக்கினார்கள். எங்கள் நாட்டவருள் பலர் கிறிக்கற் விளையாட்டில் வீரராய் விளங்கினார்கள் விளங்குகிறார்கள். றோயல் - தோமியன், சென்றல் - சென்யோன்ஸ் முதலிய கல்லூரிகளிடையே நடைபெறும் மோதல்கள் உள்நாட்டில் பெருவிருந்தாயமைவதுண்டு. வெளிநாடுகளில் இந்திய அவுஸ்திரேலிய மேற்கிந்திய ஆட்டங்களைப்பற்றிக் கூறவா வேண்டும்.

## வஜ்ஜிரம்ருதம்

(சுவாமி கெங்காதரானந்தா)

உன் குற்றம் மற்றவர் குற்றமாவதில்லை. குற்றத்தை உணர்ந்தால் திருத்துவதும் திருந்துவதும் எளிது.

அழியவேண்டியது அழியும்பொழுது அதனைப்பார்த்துத் துயரம் கொள்ளலாகாது.

★ திருப்தியுள்ளவனுக்குத் தரித்திரம் உண்டாவதில்லை ★

# தொழிலதிபருக்குப் புலவர் வாழ்த்து

(மில்க்வைற் தொழிலதிபரின் சிவப்பணி, சமூகப்பணி, பனைப்பணி, மரப்பணி, திருக்குறட் பணி எல்லா வற்றையும் மனமார வாழ்த்தியவர் மீசாலை சங்கீத பூஷணம் ஏரம்பமூர்த்தி அவர்கள்).


1. சீர்மிகுந்த சிவநெறியை நன்கு போற்றிச்
சிந்தையிலே தெய்வபக்தி நாளுந் தேங்கப்
பார்நிறைந்த மக்களெல்லாம் பண்பி லோங்கப்
பரிவோடு திருமுறைகள் குறள்கள் மேலும்
சீர்பரந்த அடியார்கள் செய்த பாடல்
சிவசக்தி முருககண பதியாம் தெய்வப்
பேர்செறிந்த வெளியீடு பலர்க்கு மீயும்
பெருமைமிகு திருமுறைக்கா வலரே வாழ்க!

2. பூவுலகிற் கற்பகமாம் பனைவித் துக்கள்
புனிதமிகு நற்பயனைத் தரும்ம ரங்கள்
ஆவலுட னனைவருந்தான் வளர்த்தே உய்ய
அன்புடனே ஊர்தோறும் சென்றே ஈந்தீர்
சீவரிலே கருணைகொண்டு செய்வ தெல்லாஞ்
சிவப் பணியாய்க் கொள்ளுகின்ற தன்மையாலே
சேவையிலே நிகரில்லாச் செம்மை கொண்டீர்
''சிவதர்ம வள்ள''லேநீ ரினிது வாழ்க!

3. நீர்வளத்தைப் பெருக்கிடவே எண்ணங் கொண்டு
நீரதற்கு முக்கியத்தை நன்குகண்டு
கார்பொழியும் மழைநீரோ வீணைச் சென்று
கடல்தனிலே சேரவிட்டு உதவாதின்று
தூர்வையுற்ற குளங்களைத்தான் செம்மை யாகத்
தோண்டுவித்து நீர்தனையே நிறையச்செய்தீர்
பார்தனிலே வாழும்வகை வாழ்ந்து காட்டும்
பண்புமிக்க பெரியவர்நீர் நன்குவாழ்க!

4. பொன்போல நேரத்தைப் பேணி நித்தம்
பெரிதான உழைப்பதனால் மிக உயர்ந்தே
மண்மேலே தர்மத்தை நாளுஞ் செய்தே
மாந்தரிலே மாணிக்க மாகநின்றே
விண்மேலே இருப்போரும் வியப்பே கொள்ள
விரிவாக உலகெங்கும் பணியினாலே
அன்போடு அனைவருந்தான் போற்றி செய்ய
அருஞ்செயல்கள் செய்பவர்நீர் நன்குவாழ்க!

5. யாழ்நகரில் இலங்குதிரு முறைமன் றத்தின்
போஷகராய் வளர்ச்சியுறப் பெருமைதந்தீர்
ஏழிசையாய் இசைப்பயனாய் நிற்கு மீசன்
இனியபுகழ் தனைப்பாடத் தாளமீந்தீர்
வாழ்க்கையிலே வருங்கால மக்க ளெல்லாம்
வளர்த்தேதான் பண்ணிசையை மிகவும்போற்றி
நாள்முழுதும் உயர்வான நன்மை காண
நயந்து தொண்டு புரிநல்லோய் வாழ்க!வாழ்க!



# பஞ்ச தந்திரம்

பார்ப்பது ஞானமே தவிர கண்களல்ல:
நற்குடியைக் குறிப்பது குணமே தவிர பிறப்பு அல்ல:
மனத்திருப்திதான் செல்வமே தவிர பணம் அல்ல.
தீய செயல்களிலிருந்து விலகுவதே உண்மை அறிவு:

மகிழ்ச்சி நிறைந்த மனத்தை உடையவன்தான் சகல செல்வங்களும் உடையவன். தோற்செருப்பு அணிந்தவனுக்குப் பூமிமுழுதும் தோலால் போர்த்தமாதிரி இருக்கும்

பேராசை என்கின்ற வாகனத்தில் ஏறியவனுக்கு நூறு யோசனைகூடத் தூரமாய்த் தோன்றுவதில்லை. திருப்தி நிறைந்த மனமுள்ளவனுக்குப் பணம் வந்தாலும் அவன் அதைப்பற்றிக் கவலை கொள்ளவேண்டிய அவசியமில்லை.

## தமிழில் வழங்கும் வட மொழிகள் சில

| | | |
|---|---|---|
| நாகம் | — | பாம்பு |
| நாசகன் | — | அழிப்பவன் |
| நாசி | — | மூக்கு |
| நாஸ்தி | — | இன்மை |
| நாஸ்திகன் | — | கடவுள் இல்லை என்பவன் |
| நாதசொரூபம் | — | ஒலிவடிவு |
| நாதம் | — | ஒலி |
| நாதன் | — | தலைவன் |
| நாநாவிதம் | — | பலவகை |
| நாபி | — | கொப்பூழ் |
| நாவிதன் | — | மயிர் வினைஞன் |
| நாமகரணம் | — | பெயரிடுதல் |
| நாயகன் | — | தலைவன் |
| நாயகி | — | தலைவி |

## பிலாமைத்தலாவையின் சதி 1781

கண்டி மன்னனைப் படுகொலை செய்துவிட்டுத் தானே மன்னனாகி ஆங்கிலேயரின் அடிவருடுவதாகப் பிலாமை என்னும் திசாவை பகற் கனுக்கண்டு இரவு பகலாகத் தருணம் பார்த்திருந்த காலம் அது.

அமைதியாய் வாழ்பவனுக்கு ஆபத்தில்லை



## விவசாய வளம்

1. சிறுபோக வேளாண்மைக்குப் போதிய நீர் இல்லாத போது செய்யக்கூடிய வேறு பயிர்கள் பயறு, உழுந்து, நிலக்கடலை, எள்ளு, சோயா.
2. சின்ன வெண்காயத்துடன் பயிரிடக்கூடிய வேறு பயிர்கள்: வள்ளி, மரவள்ளி, கத்தரி, மிளகாய், வெண்டி.
3. கறி சமைப்பதோடு இனிப்புச் செய்யவும் உதவும் காய்கறிகள்: நீற்றுப் பூசினி, உருளைக்கிழங்கு.
4. கண்ணும்புச் சத்துள்ள உணவுப் பொருள்களும் நமக்குத் தேவை. அதனைப்பெற குரக்கன், எள், அகத்தி பயிரிடவேண்டும்.
5. கிராமத்துத் தோட்டங்களில் அதிக வருவாய் தருவது மிளகாய்.
6. சாதாரணமாய் அதிகம் விளையக்கூடிய கிழங்கு மரவள்ளி.
7. வீட்டுத் தோட்டத்தில் விரைவிற் பயன் தருவதோடு என்றும் பயன்தருவது பப்பாசி.

## சித்திரைபற்றித் தமிழழகன்

சித்திரைத் திருநாள்பற்றித் தமிழ்நாட்டுத் தமிழழகன் பாடிய பாடலில் சொண்டுகூட்டாய் கொண்ட சில சொற்றொடர்கள் படித்தின்புறலாம்.

"கொத்துக் கொத்தாய் வேம்பரும்புக்குஞ்சம் தொங்கும்
சோலையிளம் பூக்களிலே சுகந்தம் எழும்
சுந்தரமாய் இந்திரவில் சோபை தீட்டும்
வாலியிளங் காலமகள் வாசல்வந்த நாள்
வசந்தஉலா சித்திரையாள் வந்துபோகும் நாள்
புதிய எண்ணம் புதியசெய்கை பொலிவுமிகும் நாள்
எதிலும் ஒரு புதியஊக்கம் எழுச்சிகொள்ளும் நாள்
இன்பமெனில் எவர்க்குமுண்டு என முழங்கும் நாள்
பொதியத் தென்றல் கிளிகளொடும் பூவயரும் நாள்
பொங்கிளமைச் சங்கத் தமிழ்ப்புகழ் விளங்கும் நாள்."

## ஐம்பதாண்டுகளுக்கு முன் இலங்கைக் குடிசனத்தொகை

ஐம்பதாண்டுகளுக்கு முன் 1931 ஆம் ஆண்டில் இலங்கைக் குடிசனத்தொகை 53,07,000 என அறியக் கிடக்கிறது. இவர்கள் சாதி சமூகப் பரம்பலில் பின்வருமாறு பகுக்கப்பெற்றிருந்தனர்.

| | | |
|---|---|---|
| சிங்களவர் | ... | 34,73,029 |
| தமிழர் | ... | 17,17,477 |
| சோனகர் | ... | 3,25,913 |
| பறங்கியர் | ... | 32,315 |
| மலாயர் | ... | 15,977 |
| ஐரோப்பியர் | ... | 9,254 |
| வேடரும் பிறரும் | ... | 32,000 |


## மந்திரியைத் தெரியப்புகுந்தவர் மந்திரியாய் வெளியே வந்தார்

அரசாங்க சபை அங்கத்தவர்களுள் போக்குவரத்துக் காரிய நிர்வாக சபையினர் எண்மர் பிரதம காரியதரிசியின் முன்னிலையில் தங்களுள் ஒருவரைத் தலைவராக (மந்திரியாராக) தெரிவு செய்வதற்கு நிர்வாக அறையுட்புகுந்தனர். அவர்களுள் ஒருவரான ஏச். எம். மாக்கான் மரக்கார் அவர்கள் யாருக்கு வாக்களிப்பது எனச் சிந்தித்தவாறு உள்ளே புகுந்தார். அங்கே நடைபெற்ற தேர்வில் இவர் பெயருக்குப் பெரும்பான்மை ஆதரவு கிடைக்கவே இவர் போக்குவரத்து மந்திரியாய் எதிர்பாராத விதமாய் வெளியேறினர்.

### உங்களுக்குத் தெரியுமா? விடைகள்.

1. இங்கிலாந்து. 2. அஸ்வான் அணைக்கட்டு 3. ஜெரூசலம். 4. யோண் டேவிஸ். 5. கோலாலம்பூர் 6. மாட்டின் லூதர் கிங். 7. சிஸ்ரையின். 8. பொது மக்கள் சபை நாற்பது. பிரபுக்கள் சபை மூன்று. 9. மகாநாமன். 10. நண்டு. 11. முப்பத்து மூன்று அடி. 12. வியாகரணம். 13. வெள்ளி. 14. நேபாளம். 15. திபத்.

*Indian Heroes and Heroines*



## NALA and DAMAYANTI

**— Swami Sivananda**

Nala was the son of Virasena, king of Nishada, modern Berar. He was very Handsome and religious. He married Damayanti, daughter of Bhima, the ruler of Vidarba in the svayamvara.

Nala lost all his kingdom and wealth in the play of dice. He left the kingdom wearing a single piece of cloth. Damayanti also accompanied Nala.

Nala deserted Damayanti in the forest Damayanti stayed in the place of Chedi. Nala became the manager of the stable of the king of Ayodhya. Damayanti was taken back by her father. There was another Svayamvara Nala came. Nala and Damayanti were again united. Nala recovered his lost kingdom.

ஒரு கிளி இறை நாமத்தைச் சொல்வதாலடையும் பயன் எவ்வளவு சிறிதோ அவ்வளவு சிறிதே விளக்கமில்லா மனனப் பாடத்தால் மனிதனடையும் பயனும்.

— மகாத்மாகாந்தி

★ மனிதனின் செயலை மனச்சாட்சி கவனிக்கிறது ★

## கதிரேசன் குமார மகாவித்தியாலயம்

மலையகத்தில் நாவலப்பிட்டி நல்ல நகரம். அங்கே யாழ்ப்பாணத்து நல்லூரைச் சேர்ந்த நம்மவர் சம்பந்தர் என்பவர் கதிரேசன் பெயரில் ஒரு பாடசாலையை 1924ம் ஆண்டில் ஆரம்பித்து நடத்திவந்தார். இப்பாடசாலை நாளும் வளர்ந்து கனிஷ்ட பிரிவு சியேட்ட பிரிவு என இருபெரும் வித்தியாலயங்களாக நிலவுகின்றது. சியேட்ட பிரிவில் முன்னர் இணுவில் பண்டித சபா. ஆனந்தர் பணி புரிந்தவர். கனிஷ்ட பிரிவில் ஏழாலை சைவப் பெரியார் நா. முத்தையா பணிபுரிந்தவர்.

இன்று கதிரேசன் குமார மகாவித்தியாலயம் என நிலவும் இக்கல்லூரியில் முதுமானிப்பட்டம் பெற்ற எஸ். வி. ஆறுமுகம் என்பார் அதிபராயுள்ளார். கல்விப் பணிப்பாளர் பெத்தியாகொட, பிரதம கல்வியதிகாரி கே. இராசையா, வட்டாரக்கல்வியதிகாரி பிரம்பஸ்ரீ பி. எஸ். சர்மா முதலானோர் இக்கல்லூரியிற் கண்ணும் கருத்தும் உள்ளவராயிருக்கிறார்கள். குமார வித்தியாலயம் எனப் பெயரளவிலமைந்தாலும் இங்கே பெரிய வகுப்புக்களில் பெண்கள் அதிகமாகப் பயில்கின்றார்கள்.

கல்லூரிக் கட்டடங்களின் மத்தியில் அழகிய விமானத்தோடு கூடிய விநாயகராலயம் ஒன்று அபிவிருத்தி சபையினரின் பேருக்கத்தால் உருவாகியுள்ளது. இத்தர்மப் பணியில் இனமத வேறுபாடின்றி உதவி செய்துள்ள பெரியார்கள் பலர். ஜனாப் எஸ். எவ. முகம்மது அவர்கள் நகரபிதா என்முல் பிதாவேதான். இப்பெரியார் தம்பரிபாலன வட்டாரங்களிலுள்ள இந்துக்கோயில்களை வெகுவாக மதிக்கிறார். சிலம் நிறைந்த உத்தமர் என்பது இவரின் செய்கையால் தெரிகிறது. தொழிலாளர் காங்கிரஸ் நிதிச்செயலாளர் வே. அண்ணாமலை அவர்கள், முத்துமாரியம்மன் தேவஸ்தானத் தலைவர் கிருஷ்ணசாமி அவர்கள், நாவலப்பிட்டி இந்து மகாசபைத் தலைவர் இலட்சுமணன் அவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சபையின் செயலாளர் ரெங்கநாதன் அவர்கள், ஆத்மசோதி நா. முத்தையா அவர்கள் இன்னும் பலர் விநாயகராலயம் அமைவதற்குப் பாடுபட்டுள்ளார்கள்.

அபிவிருத்தி சபையினர் விடாப்பிடியாய், விடாக்கண்டராய் மில்க்வைற் தொழிலதிபரை இறுகப்பற்றி பணிசெய்யப் பணித்தவகையில் இவர் ஆலயத்துக்குப் பிரதிஷ்டா விக்ரகத்தையும், எழுந்தருளி விக்கிரகத்தையும் உதவியதோடு கும்பாபிஷேக வைபவத்தையும் 1981 பங்குனி உத்திர நாளில் உடன் நின்று நடைபெறச் செய்து அதன் நினைவாக விநாயகப் பெருமான் வழிபாடும் தோத்திரமும் என்னும் நூலையும் வெளியிட்டு மலையகம் எங்கும் வழங்கினார்.

இவற்றையெல்லாம் பகல் முழுக்க உடன் நின்று சிறப்பித்த மாண்புமிகு மந்திரியார் தொண்டமான் அவர்களும், பிரதி ராஜாங்க மந்திரியார் மாண்புமிகு சந்திரா கருணாரத்தின அவர்களும் மில்க்வைற் தொழிலதிபரின் சைவப்பணி, தமிழ்ப்பணி, சமூகப்பணிகளைப் பாராட்டினார்கள்.

## பலே பதுளை

மலையகத்து பதுளை மாநகரில் காலத்துக்குக் காலம் சைவ மகாசபைகள் தோன்றிப் பணிசெய்து மங்கிப் போவது வழக்கம். இன்றுள்ள இந்து மகாசபையினர் தம் கடன் பணிசெய்து கிடப்பதே என்னும் இலட்சியத்தை இறுகப்பிடித்துள்ளனர். இவர்கள் ஆறாண்டுக் காலம் பணிபுரிந்துள்ளார்கள். சென்ற 21-3-81 சனிக்கிழமை மாலை சரஸ்வதி மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற ஆண்டுவிழா கோலாகலமாயிருந்தது. மண்டபம் நிரம்பி வெளியிடங்களிலும் மக்கள் நெருக்கமாகநின்று விழாவில் பங்குபற்றினார்கள்.

இந்து மகாசபையினர் வெளியிட்ட திருவருள் என்னும் சஞ்சிகையின் முதற்பிரதியைக் கையேற்றுப் பேசிய மில்க்வைற் தொழிலதிபர் பல அரிய கருத்துக்களைக் கூறி நகரங்கள் தோறும் இந்து மாமன்றங்கள் அமைதல் வேண்டும் என்பதை காஞ்சிப் பெரியார் வகுத்த வழிகளையும் விளக்கித் தமது வெளியீடுகளை எல்லோருக்கும் வழங்கினார்.

இந்து மகாசபையின் தலைவராயிருக்கும் சைவத்திரு டாக்டர் கு. சண்முகநாதன் யாழ்ப்பாணத்து மாணிக்கத் தியாகராசா அவர்கள் வழிவந்தவர். காரியதரிசி சிவசத்திவேல் தமிழன்பர் சட்டத்தரணி செல்லத்துரை அவர்களின் மைந்தர். தனாதிகாரி உற்சாகமும் ஊக்கமும் நிறைந்தவர். திருவருளை வெளியிட்டுப் பேசிய வைத்தியாதிகாரி டாக்டர் ஜெகநாதன் செந்தமிழன்பும் சிவநேயமும் பொருந்திய இளைஞன். இம்மகாசபை வாழ்வதாக.

## அரசியல் வானில்

சேர் அருணாசலம் அவர்கள் தேசாதிபதியின் மந்திராலோசனைக் குழுவிலமரும் தகுதியும் மேன்மையும் பெற்றவர். அவர் எமது அரசியல் தேவைகள் எனப் பேசிய பேச்சில் பூரண சுதந்திரத்தையும் பல்கலைக் கழகத்தையும் வற்புறுத்தியவர். அவர் 1919ம் ஆண்டில் தேசிய மகாசபையை உருவாக்கித் தலைமை தாங்கியமை இலங்கையில் தேசியத்தை உருவாக்குவதற்கேயாம். இலங்கையில் கேம்பிரிஜ் பட்டதாரிகள் நிறைந்திருந்த காலத்தில் அருணாசலம் வெகுவாகப் பிரகாசித்தார்.

இலங்கையில் அரசியல் திருத்தம் கோரிக் கிளர்ச்சி செய்த தனிப்பட்ட மனிதர்களைவிட மன்றங்கள் சபைகளின் பங்களிப்பு அதிகமாகும். இலங்கைத் தேசிய மகாசபை, யாழ்ப்பாண மகாசபை, சிலாப மகாசபை, கரைநாட்டு உற்பத்தியாளர் சபை என்பன வெகுவாக இத்துறையில் உழைத்தன. இவர்கள் செய்த பெருமுயற்சியின் பலனாகவேதான் இலங்கைய நள் படித்தவர்கள் பிரதிநிதியாக ஒரேயொருவர் இலங்கை முழுவதையும் பிரதிநிதித்துவம் செய்யும் முறை உண்டானது. இங்ஙனம் இலங்கை முழுவதையும் பிரதிநிதித்துவம் செய்தவர் சேர் இராமநாதன். அவர் 1910 முதல் 1920 வரை இருமுறை தேர்தல்களில் பெருவெற்றியீட்டியவர்.

## கண்கண்ட பராசக்தி
## கைகண்ட ஔடதம்

வளவுகள் தோறும் வீதிகள் தோறும் வேம்பு இலையுதிர்த்தித் தளிர்த்துப் பூத்துக் குலுங்குகின்றது. உதிர்ந்த சருகு பொன் போலக் காட்சியளிக்கிறது. அதன் உரத் தன்மையை உணர்ந்தும் அதனைப் பயன்படுத்துவாரைக் காண்பதற்கில்லை. இரவிரவாகப் பட்டை வெட்டி வேம்பைப் படவைப்பவர் பலர். வேப்பந்தளிரின் மருத்துவக் குண மகிமை பற்றிப் பலமுறை செய்தியில் எழுதியதோடு வேம்பு என்னும் நூலினையும் வெளியிட்டுள்ளோம். வெறுந்தரைகளில் வாடிவதங்கிக்கிடக்கும் வேப்பங்கன்றுகளுக்கு வைத்திய கலாநிதி ஒருவர் போத்தில்களில் தண்ணீர் ஊற்றி வளர்த்துள்ளார். அவர் தன்வந்திரிபோல வேம்பின் நண்பராயிருந்தவர். தன்வந்திரியிடம் மருத்துவம் பயின்ற கிரேக்க வைத்திய நிபுணர் வேம்பின் மகிமையை மேற்கு நாடுகளில் பரப்பியுள்ளார். வேப்பமரம் எவ்விடத்திலும் பயன்தரும். நைஜீரியாவில் ஆண்டு முழுக்கப் பூத்துக் காய்க்கிறது என்று சுகோட்டோ மாநிலத்திலிருந்து அன்பர் ஒருவர் எழுதுகின்றார்.

வேப்பமரம் ஊர்களின் மத்தியில் நுரையீரல்போல் நிற்கிறது. நமக்குவேண்டிய பிராணவாயுவைப் பகல் முழுவதும் உதவுகிறது. மாங்காயைப் பழுக்கவைப்பதற்கு வேப்பம் இலை பயன்பட்டது. கிருமிநாசினியாகப் பயன்பட்டது. வேப்பஞ் சருகுகள் தானியங்களைப் பூச்சிகளிலிருந்து காக்கின்றன. வேப்பம் இலைகளை அவித்து எடுத்த நீர் புண்களையும் காயங்களையும் அழுக்கு நீக்கிக் காயச் செய்யும். கண்நோய், கட்டி முதலியவற்றையும் வேப்பிலைக் காசாயம் குணப்படுத்துகிறது.

வேப்பம் பூ எமக்கு வரப்பிரசாதமாகக் கிடைக்கும் வேளையில் தேவைநோக்கி ஒடித்து வடகஞ்செய்து வைத்துப் பயன்படுத்துவோமாக வேப்பஞ் சருகை வீணாக்காமல் பசளையாகப் பயன்படுத்துவோமாக. வேப்பம் விதைகளைப் பொறுக்கி எண்ணெய் ஊற்றிப் பயன் செய்வோமாக. வேப்பம் விதைகளுக்கு மில்க்வைற் தொழிற்சாலையில் நல்ல விலைகிடைக்கும். இவர்கள் வேப்பெண்ணெய் கலந்து நீம் சவர்க்காரம் செய்கிறார்கள். இதனைத் தயாரிக்கும் முறைகளைக்காண்பித்து ஊக்கப்படுத்தியவர் சுவாமி சுத்தானந்தர் அவர்களாவர். வேப்பம் பிண்ணாக்கினை வீண்போகவிடாது. அதனையும் ஒரு மூலப்பொருளாகக் கொண்டு நீம் சுகாதார தூபம் செய்கிறார்கள். நாங்கள் வேம்பை வீணில் தறிக்கலாகாது. வசதியான வெற்றிடங்களில் வேம்பினை நிழலுக்காவும் மருத்துவப் பயனுக்காகவும் மிகுதியாக நாட்டுதல் வேண்டும். வேப்பங்கன்றுகள் தேவையானோர் எவ்வளவு தொகை வேண்டுமாயினும் பருவகாலத்தில் மழைக் காலத்தில் மில்க்வைற் தொழிலகத்தில் இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம். எல்லோரும் வைத்திய கலாநிதி. க. கனகரத்தினம் அவர்களைப்போல் வேம்பின் நண்பராதல் விரும்பத்தக்கது. வேம்பு கண்கண்ட அன்னை பராசக்தி. அவளே வேம்பு; வேம்பே அவள்.


# நீம் சுகாதார தூபம்

வீட்டுத் தூய்மைக்குச் சிறந்தவழி
வீட்டில் இலையான், கொசுகு,
நுளம்பு, பூச்சி புழு
உபத்திரவம் நீங்க ஒருவழி!!
பழந்தமிழ் இலக்கியத்தில்
கடிப்பகை எனப்படும் வேம்பின் புகை.




25 சதம் பெறுமதியான பைகளில் உண்டு.
எங்கும் கிடைக்கும்.

இது ஒரு மில்க்வைற் தயாரிப்பு


## மாங்காய் ஊறுகாய்

**தேவையான பொருட்கள்:**

மாங்காய் — 2
செத்தல் மிளகாய் — 10
வெந்தயம் — 1 தேக்கரண்டி
பெருங்காயம் — 1 சிறுதுண்டு
அளவான உப்பு

**செய்கை முறை:**

தோலுடன் மாங்காயை சிறு சிறு துண்டுகளாக வெட்டவும். மிளகாய், வெந்தயம், பெருங்காயம் இவை, மூன்றையும் வறுக்கவும். பின் அளவான உப்புடன் பொடி செய்யவும். பின் வெட்டிய மாங்காயுடன் இந்தப் பொடியைப் போட்டு நன்றாகக் கலக்கவும். சுத்தமான போத்தலில் போட்டு மூடிவைக்கவும். கைபடாமல் எடுத்து சாப்பிடவேண்டும்.

திருமதி. ந. ஜெகதீசன்

யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம். யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர் ''சிவநெறிப்புரவலர்'' க. கனகராசா ஜே. பி. அவர்கள்.
கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் 1-3-81.